# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

### <u>உயர் ஸ்தானிகரின் வட மாகாண விஜயம்</u>

இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்கள் 2024 பெப்ரவரி 15 முதல் 17 வரை வட மாகாணத்துக்கான தனது முதலாவது உத்தியோக பூர்வ விஜயத்தினை மேற்கொண்டிருந்தார். வட மாகாணத்துடனான சமூக பொருளாதார மற்றும் கலாசார உறவுகளை மேலும் வலுவாக்குதற்கான இந்தியாவின் திடசங்கல்ப்பம் மற்றும் மிகவும் வலுவான இருதரப்பு பங்குடைமை ஆகியவற்றுக்கு சான்று பகரும் வகையில் பல்வேறு வகையான நிகழ்வுகள் இவ்விஜயத்தின்போது இடம்பெற்றிருந்தன.

2. 2023 ஜூலையில் வெளியிடப்பட்ட இருதரப்பு பொருளாதார பங்குடைமை தொலைநோக்கு ஆவணத்தின் கருப்பொருளான தொடர்புகளை மேம்படுத்தும் திட்டங்களுக்கு இவ்விஜயத்தின்போது உயர் ஸ்தானிகர் விசேட முக்கியத்துவத்தினை வழங்கியிருந்தார். மேலும், இவ்விஜயத்தின் அங்கமாக காங்கேசன்துறை துறைமுகம் மற்றும் தலைமன்னார் இறங்குதுறை பகுதிகளுக்கு சென்றிருந்த உயர் ஸ்தானிகர், இரு நாடுகளுக்கும் இடையில் படகு சேவைகளை துரிதமாக மீள ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தார். அத்துடன் காங்கேசன்துறை மற்றும் நாகபட்டினம் இடையிலான படகு சேவைகள் எதிர்வரும் வாரங்களில் மீள ஆரம்பிக்கபடுவதற்கான நம்பிக்கையினையும் அவர் வெளியிட்டிருந்தார். தலைமன்னார் மற்றும் இராமேஷ்வரம் இடையிலான கப்பல் சேவைகளை ஆரம்பிப்பதற்கு மேற்கொள்ளப்பட்டிருக்கும் முயற்சிகள் குறித்தும் அதிகாரிகளிடம் அவர் குறிப்பிட்டிருந்தார். அத்துடன் பலாலி விமான நிலையத்துக்கான விஜயத்தின்போது அவ்விமான நிலையத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மூலமாக விமானப் போக்குவரத்தினை மேம்படுத்துவதற்கான வழிவகைகளையும் அவர் ஆராய்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

3. மேலும், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான மிகவும் வளமானதும் பகிரப்பட்டதுமான மரபினை சுட்டிக்காட்டும் வகையில்

உயர் ஸ்தானிகர் அவர்கள் வரலாற்றுச் சிறப்பு மிக்க ராமர் சேது (ஆதாமின் பாலம்) பகுதியில் விசேட வழிபாடுகளிலும் ஈடுபட்டிருந்தார். அத்துடன் இந்திய அரசாங்கத்தின் நன்கொடையின் கீழ் புனர்நிர்மானம் செய்யப்பட்ட தொன்மைமிகு திருக்கேதீஸ்வரம் ஆலயத்துக்கும் உயர் ஸ்தானிகர் விஜயம் செய்திருந்தார். நயினாதீவிலுள்ள நாகபூசணி அம்மன் ஆலயம் மற்றும் நாக விகாரை, மன்னார் மடு தேவாலயம் மற்றும் நல்லூர் கந்தசாமி கோவில் ஆகிய வணக்கஸ்தலங்களில் வழிபாடு செய்த உயர் ஸ்தானிகர், இந்திய இலங்கை மக்களின் நல்வாழ்வு மற்றும் சுபீட்சத்துக்காக பிரார்த்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இந்திய மக்களின் அன்பளிப்பான தனித்துவமிக்க யாழ்ப்பாணம் கலாசார நிலையத்தில் நடைபெற்ற தியாகராஜ சுவாமிகள் ஆராதனை நிகழ்விலும் அவர் கலந்துகொண்டிருந்தார்.

4. சமூகத்தின் பல்வேறு பிரிவுகளுக்குமான இந்தியாவின் அர்ப்பணிப்பினை மீள உறுதிப்படுத்தும் வகையில், மீனவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் இலக்குடன் மன்னார் மாவட்டத்திலுள்ள மீனவ சமூகங்களுக்கு உறை குளிரூட்டிகள் உயர் ஸ்தானிகரால் வழங்கப்பட்டன. அத்துடன் குறிப்பாக பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களை இலக்காகக் கொண்டு கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணத்தில் தேவைகளை எதிர்கொண்டிருக்கும் நூற்றுக்கணக்கான குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் உயர் ஸ்தானிகரால் வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

5. யாழ்ப்பாணத்துக்கு அப்பாலுள்ள தீவுகளின் சக்தி தேவையினை நிறைவு செய்யும் பொருட்டு இந்தியா மேற்கொண்டுள்ள பெருமுயற்சிகளின் அங்கமாக நயினாதீவில் அமையப்பெறும் கலப்பு புதுப்பிக்கத்தக்க சக்தி முறைமை திட்டத்தினை துரிதமாக அமுலாக்குவதற்கான சாத்தியங்களையும் அவர் ஆய்வு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த திட்டமானது நயினாதீவு மற்றும் அனலைதீவு ஆகிய இடங்களில் இந்திய அரசாங்கத்தின் நன்கொடை மூலமாக அமுல்படுத்தப்பட்டு வருகின்றமை இச்சந்தர்ப்பத்தில் நினைவில் கொள்ளத்தக்கதாகும்.

6. உயிர் தியாகம் செய்த இந்தியாவின் வீரப் புதல்வர்களுக்கு இந்திய அமைதி காக்கும் படையின் நினைவுத் தூபியில் உயர் ஸ்தானிகர் அஞ்சலி செலுத்தியிருந்தார்.

7. மேலும், தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள், புலமையாளர்கள், வர்த்தக பிரமுகர்கள், உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடனும் மேலதிக ஒத்துழைப்புகள் மற்றும் அபிவிருத்தி குறித்து உயர் ஸ்தானிகர் கலந்துரையாடல்களில் ஈடுபட்டிருந்தார். இலங்கையுடன் இந்தியா கொண்டிருக்கும் பன்முக அபிவிருத்தி ஒத்துழைப்பு பங்குடைமையில் 70 பில்லியன் இலங்கை ரூபாவுக்கும் அதிகமான நன்கொடை திட்டங்களுடன் வட மாகாணம் அதிக முக்கியத்துவம் வழங்கப்படும் பிராந்தியமாக உள்ளது அத்துடன் இப்பிராந்திய மக்களுக்கான இந்தியாவின் நிலையான அர்ப்பணிப்பை மீள உறுதிப்படுத்தும் ஒரு சந்தர்ப்பமாக இந்த விஜயம் அமைகின்றது.

**********************

**கொழும்பு**
**18 பெப்ரவரி 2024**